ஜனவரி 27-பெப்ரவரி 2

**பாடம் 5**

# ஏதேனுக்குப் பிறகு வந்த உக்கிராணக்காரர்கள்

**மனன வசனம்**

**சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமர் என்று எண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். 1தெச 2:4.**

**ஆராய்ச்சிக்கு**

**ஏசாயா 22:14-18; 1கொரி 4:1,2; கொலோ 2:2,3; எபே 6:13-17; 2கொரி 5:10.**

ஜனவரி 27 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்பட்ட முதல் வேலையே உக்கிராணத்துவம்தான். தோட்டத்தையும், சிருஷ்டிக்கப்பட்டிருந்த அனைத்தையும் பண்படுத்தி, அனுபவித்து, ஆண்டுகொள்ளும்படி தேவன் கொடுத்தார். ஆதி 2:15. ஆனாலும், அவை அனைத்திற்கும் அவர்கள் சொந்தக்காரர்கள் கிடையாது. அதற்குமாறாக, தேவன் அவர்களை நம்பி ஒப்படைத்தவற்றுக்கு உக்கிராணக்காரர்கள்.

விழுகைக்குப்பிறகு, நம் முதல் பெற்றோர் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டபிறகு, உக்கிராணத்தும் என்பது எதைக் குறிக்கிறதென்பதை ஆழமாக ஆராயப்போகிறோம். அதாவது, நாமும் உக்கிராணக்காரர்கள்தாம்; ஆனால், ஆதாமும் ஏவாளும் ஆதியில் அனுபவித்த சூழ்நிலையைக்காட்டிலும் முற்றிலும் வித்தியாசமான ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்.

உக்கிராணத்துவம் என்றால் என்ன? வேதாகம நபர்கள் சிலர் வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து உக்கிராணத்துவம்பற்றி அறியமுடிகிறது. உக்கிராணத்துவம் குறித்து தெளிவாகச் சொல்கிற வசனங்களும் உள்ளன. நாம் தேவனுடைய உக்கிராணக்காரர்களாக மாறும்போது, உலகத்தைக் குறித்தும், உலகப்பொருட்களைக் குறித்தும் நம் பார்வை மாறுகிறது; சிருஷ்டிகரிலும் அவருடைய ஊழியப்பணியிலும் கவனம்செலுத்தத் துவங்குகிறோம். ஏதேனில் விழுகை உண்டானதற்குப்பின், உக்கிராணத்துவப் பணியில் மாற்றம் உண்டாகியிருக்கிறது; பூமியைப் பாதுகாக்கிற பொறுப்புகளோடு, ஆவிக்குரிய சத்தியங்களின் நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்கிற பொறுப்பையும் தேவன் நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்.

2017, பெப்ரவரி 3 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## பழைய ஏற்பாட்டு உக்கிராணக்காரர்கள்

உக்கிராணக்காரன் என்கிற மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் ஒரு சில இடங்களில்தான் வருகிறது. 'வீட்டின்மேல்' விசாரணைக்காரனாக இருப்பவரைச் சுட்டிக்காட்ட அந்த வார்த்தை பெரும்பாலும் பயன்படுகிறது. அவர்தான் 'உக்கிராணக்காரன்' எனப்படுகிறார். ஆதி 43:19; 44:1,4; 1இராஜா 16:9. தங்கள் எஜமானின் ஆஸ்திகளையும் வீட்டுக்காரியங்களையும் நிர்வகிக்கவேண்டிய பொறுப்பை உக்கிராணக்காரர்கள் பெற்றிருந்தார்கள். எஜமான் சொல்கிற அனைத்தையும் செய்ய வேண்டும். என்னவெல்லாம் ஓர் உக்கிராணக்காரனின் குணநலன்களாக இருந்தன என்பதைக் கண்டுபிடித்துவிட்டால், உக்கிராணக்காரன் என்பதற்கு பழைய ஏற்பாடு சொல்லும் விளக்கம் புரிந்துவிடும். உக்கிராணத்துவம்தான் உக்கிராணக்காரரின் அடையாளம்; அந்தப் பொறுப்பிலிருந்து அவர்கள் வழுவக்கூடாது.

உக்கிராணக்காரரின் சில குணநலன்களை பழைய ஏற்பாட்டில் தெளிவாகக் காணமுடிகிறது. முதலாவது, அது அதிக பொறுப்புமிக்க ஒரு பதவி. ஆதி 39:4. திறமைகளின் அடிப்படையில் உக்கிராணக்காரர்கள் தேர்தெடுக்கப்படுகிறார்கள்; சொன்ன வேலையைச் செய்துமுடிப்பதால் எஜமானின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரவான்கள் ஆகிறார்கள். இரண்டாவது, தங்களை நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ளவற்றிற்கு தாங்கள் எஜமான்கள் அல்ல என்பதை உக்கிராணக்காரர்கள் அறிந்திருப்பார்கள். ஆதி 24:34-38. இதுதான் ஓர் எஜமானுக்கும் உக்கிராணக்காரனுக்கும் இடையேயுள்ள முக்கிய வித்தியாசம். மூன்றாவது, உக்கிராணக்காரர்கள் தங்களை நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ளவற்றை தங்களுடைய உபயோகத்திற்காகக் களவாடும்போது, அவர்களுக்கும் அவர்களுடைய எஜமானுக்கும் இடையேயுள்ள உறவு முறிகிறது; உக்கிராணக்காரர்கள் பணியிலிருந்து விலக்கப்படுகிறார்கள். ஆதி 3:23; ஓசியா 6:7.

***எசேக்கியாவின் ஆட்சிக்காலத்தில் உக்கிராணக்காரனாகவும் கருவூலக்காரனாகவும் செப்னா நியமிக்கப்பட்டான். ஏசா 22:14-28. இரண்டுமே அதிகாரமிக்க பதவிகள். தன் பதவியை அவன் தவறாகப் பயன்படுத்தியதால், அவனுக்கு என்ன நிகழ்ந்தது?***

'தன் எஜமானின் பிரதிநிதியாக தான் இருப்பதை உக்கிராணக்காரன் அறிந்திருப்பான். தன்னுடைய பொறுப்புகளை அறிந்திருப்பான்; தான் இருக்கிற இடத்தில் தன் எஜமான் இருந்தால் எப்படிச் செயல்படுவாரோ, அப்படியே தன் எஜமானுக்காகச் செயல்படுவான். தன் எஜமானின் நலன்களில் அக்கறைகாட்டுவான். உக்கிராணக்காரன் தன் எஜமானின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவதால், அது மதிப்புமிக்க ஒரு பதவி. எவ்விதத்திலாவது அவன் சுயநலமாகச் செயல்பட்டு, தன் எஜமானின் பொருட்களை வியாபாரம்செய்து கிடைத்த லாபத்தை தனது சுயலாபத்திற்காகப் பயன்படுத்தினல், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பிற்கு அவன் அபாத்திரனாகிறான்.' - *EGW, 9T, p 246.*

இந்த உலகத்தில் நாம் பெற்றிருக்கும் அனைத்திற்கும் நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம்; இந்த முக்கியக் கருத்தை அறிந்துகொள்ள நாம் என்ன செய்யலாம்? இத்தகைய எண்ணமானது நம்முடைய ஒவ்வொரு செயலிலும் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்க வேண்டும்?

## புதிய ஏற்பாட்டு உக்கிராணக்காரர்கள்

புதிய ஏற்பாட்டில் ‘உக்கிராணத்துவம்’ என்பதற்கு இரண்டு வார்த்தைகள் வருகின்றன; இதில் **எபிட்ராபாஸ்** என்கிற வார்த்தை 3 முறையும், **ஓய்கானாமாஸ்** என்கிற வார்த்தை 10 முறையும் வருகின்றன. நிர்வாகப் பொறுப்புகள் அடங்கிய பதவிகளை இரண்டு வார்த்தைகளுமே சுட்டிக்காட்டுகின்றன. அது எஜமான்கள் தங்கள் உக்கிராணக்காரர்களை நம்பி ஒப்படைக்கிற ஒரு பதவி.

புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாடும் உக்கிராணக்காரர்களை அவர்கள் செய்த பணியை வைத்து வரையறுக்கின்றன. புதிய ஏற்பாடானது உக்கிராணக்காரர்களை கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்கள் என்கிறது; லூக் 12:48. எதிர்பார்ப்புக்கேற்ப வாழவேண்டியவர்கள் என்கிறது. 1கொரி 4:2. ஆனால், பழைய ஏற்பாடானது உக்கிராணத்துவத்தில் தேவனே எஜமான் என்பதை வலியுறுத்துகிறது. இரண்டு ஏற்பாடுகளுமே உக்கிராணத்துவம்பற்றி ஒரேவிதமான கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன; ஆனால், வீட்டு விசாரிப்பைவிட அதிகப் பொறுப்பு இருப்பதை புதிய ஏற்பாடு சொல்கிறது.

அநீதியுள்ள உக்கிராணக்காரன் பற்றிய உவமையில், உக்கிராணத்துவம் என்றால் என்னவென்பதை இயேசு விவரிக்கிறார். லூக் 16:1-15. பணப்பிரச்னையின்போது உக்கிராணக்காரன் தப்பினவிதத்தை அங்கு அவர் விளக்கவில்லை. விசுவாசத்தை ஞானமாகச் செயலில் காட்டி, எவ்வாறு ஆவிக்குரிய பேரழிவிலிருந்து தப்பலாம் என்பதைக் கற்றுத்தருகிறார். ஞானமுள்ள ஓர் உக்கிராணக்காரன், இவ்வுலக வாழ்க்கையிலேயே லயித்துப்போகாமல், இயேசுவின் வருகைக்காக ஆயத்தப்படுவான். மத் 25:21.

***உக்கிராணக்காரர்பற்றியும் உக்கிராணத்துவம்பற்றியும் வேதாகமம் என்ன சொல்கிறது? 1கொரி 4:1,2; தீத்து 1:7; 1பேதுரு 4:10***

‘தேவன் எனக்குத் தந்திருக்கிற ஒவ்வொரு மனத்திறனும் ஆற்றலும் விழிக்கும்படி, பரிசுத்த ஆவியானவருக்கு என் இருதயத்தைத் திறப்பேனா? நான் கிறிஸ்துவின் சொத்து; அவருடைய சேவைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறேன். அவருடைய கிருபையின் உக்கிராணக்காரன் நான்.’ - *EGW, FE, p 301.*

லூக் 12:35-48இல், ‘உக்கிராணக்காரன்’ என்கிற வார்த்தையை உருவகமாகவும் இயேசு பயன்படுத்துகிறார். ஞானமுள்ள உக்கிராணக்காரன் மனுஷகுமாரனுடைய வருகைக்கு ஆயத்தமாக இருக்கிறான்; உண்மையற்ற உக்கிராணக்காரன் தன் எஜமான் வரத் தாமதமாகுமென்று அக்கறையற்றிருக்கிறான். அநீதியுள்ள உக்கிராணக்காரன் ஒரு கொடூரனாக மாறி, தன்னைச் சுற்றிலும் உள்ளவர்களிடம் அத்துமீறி நடக்கிறான். நற்கிரியைகளுக்கு நல்ல முன்மாதிரியாக இல்லாதவனாகவும் இரக்கமற்றவனாகவும் மாறுகிறான்.

கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய உடைமைகளின் நிர்வாகிகளாக அழைக்கப்படுகிறோம். முக்கியமாக, பரலோகம்செல்ல ஆயத்தமாகும்படி ஆவிக்குரிய விஷயங்களை நிர்வகிக்கவேண்டும்.

தாமதம் என்கிற பிரச்சனை செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளுக்கு பெரும் இடறலாக இருக்கிறது. லூக் 12:45 சொல்லும் வஞ்சகத்தில் விழுந்துவிடாதிருக்க என்ன செய்யலாம்?

## தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரர்கள்

***கொலோ 2:2,3; 1தீமோ 3:16 ஆகிய வசனங்கள் இரகசியமென்று எதைச் சுட்டிக்காட்டுகின்றன? இரகசியம் என்று சொல்வதால், ஓர் அளவுதான் அதை அறியமுடியுமென்பது சுட்டிக்காட்டப்படு கிறதா?***

நாகமாத்தியனாகிய சோப்பார், "தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராயமுடியுமா?" என்று யோபுவிடம் கேட்கிறார். யோபு 11:7. அந்தரங்கம் அல்லது இரகியம் என்றால், 'குழப்பமான, தெளிவில்லாத, அறியப்படாத, விளக் கப்படாத அல்லது புரியமுடியாத' என்று அர்த்தம். தேவனுடைய இரகசியங்கள் வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன; ஆனால் அவற்றை முற்றிலும் புரிந்து கொள்வது நம்மால் இயலாது. அதனால்தான், அவை மறைவானவைகள். நம் மால் சிறிது தூரம்தான் பார்க்கமுடியும் எனும் நிலையில் நம் கண்களில் குறை இருக்கும்போது, அந்தக் கண்களால் வானத்தை உற்றுநோக்கி, அதிலுள்ள சிறு சிறு விபரங்களைக்கூட அறிந்துவிடலாம் என்று நினைப்பது போன்றது. தேவன் நமக்கு வெளிப்படுத்தாத பட்சத்தில், அவற்றை நாம் காணவே முடியாது.

***நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளவைகள்பற்றி உபா 29:29 என்ன கூறுகிறது?***

நம்மால் முற்றிலும் புரிந்துகொள்ள முடியாத விஷயங்களுக்கு உக்கிராணக் காரர்களாக நாம் இருக்கிறோம். வெளிப்பாடும் வேதாகமமும் வெளிப்படுத்தி யிருப்பவற்றை மட்டுமே அறியமுடியும். 'கிறிஸ்துவின் ஊழியக்காரராகவும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரராகவும்' வாழ்வதே நம்முடைய மிகப்பெரிய உக்கிராணத்துவமாகும். 1கொரி 4:1.

தேவன் வெளிப்படுத்தியிருக்கும் சத்தியத்தை நாம் பாதுகாக்கவேண்டும்; பத்திரப்படுத்தவேண்டும்; போதிக்கவேண்டும்; அதின்மேல் அக்கறைகாட்டவேண் டும்; இதை தேவன் விரும்புகிறார். இதை எவ்வாறு செய்கிறோம் என்பதே நம் உக்கிராணத்துவம் எப்படிப்பட்டதென்பதைக் காட்டும்; நாம் 'விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்கள்'தானா என்பதையும் வெளிப்படுத்தும். 1தீமோ 3:9.

'மகிமையின் நம்பிக்கையாகிய' கிறிஸ்துவை நாம் எல்லாருமே அனுபவிக்க முடியுமென்பதே எல்லாவற்றிலும் மிகப்பெரிய இரகசியமாகும். இரட்சிப்பின் திட்டம் தெய்வாதீனமானது; அதை நாம் முற்றிலும் புரிந்துகொள்வது கடினம். உண்டாக்கப்பட்ட அனைத்தையும் சிருஷ்டித்தவர் இந்தப் பூமிக்கு வந்து, 'மாம்சத் தில் வெளிப்பட்டார். யோவான் 1:1-3.' *EGW, 6MR, p. 112.* மனிதர்களின் பாவங் களுக்காகப் பலியாகவே வந்தார். எந்த ஒரு சிருஷ்டிப்பாலும் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாத மறைபொருள்கள் இதில் உள்ளன. இயேசு ஏன் பூமிக்கு வந்தார் என்பதை அறிந்துகொள்ள தேவதூதர்களும் ஆவலாக இருக்கிறார்கள். 1பேதுரு 1:12. அவர்கள் அறிந்துகொண்டதை நாமும் புரிந்துகொள்ளும்போதுதான், ஆண்டவரை அவருடைய மகிமைக்காகவும் நற்குணத்திற்காகவும் நாம் எல்லோ ருமே போற்றித் துதிக்கமுடிகிறது. வெளி 5:13.

நற்செய்தியின் உக்கிராணக்காரர்களாக நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள். அப்படியானால் என்னென்ன பொறுப்புகள் தாமாகவே உங்களைச் சேருகின்றன?.

உக்கிராணத்துவம் என்றதும், பொருட்களை நிர்வகிப்பதுதான் நினைவிற்கு வரும். ஆனால், அதைவிட அதிகமானது உக்கிராணத்துவத்தில் உள்ளது; தொட்டு உணரமுடியாத ஈவுகளையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள் நாம் எப்படிப்பட்டவர்களாக மாறமுடியுமோ, அப்படிப்பட்ட மாற்றத்தை அடைவதற்கு தேவன் நமக்குத் தருகிற ஆவிக்குரிய ஆஸ்திகளாக இவை இருக்கின்றன. 1பேதுரு 4:10. எனவே, தொட்டுணரக்கூடிய நன்மைகளைவிட தொட்டு உணரமுடியாத நன்மைகளை மிகவும் கவனமாக நிர்வகிக்கவேண்டும்; ஏனெனில், அவை விலைமதிக்க முடியாதவை.

***நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கும்படி தேவன் நமக்கு எவற்றைத் தந்திருக்கிறார்? எபே 6:13-17. இவற்றை நாம் மிகச் சரியாக நிர்வகிக்கவேண்டியது ஏன் முக்கியமானது?***

'தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.' ரோமர் 6:23. உலகமும் உலகம் தரக்கூடியவைகளும், கிறிஸ்துவுக்குள் நமக்குக் கிடைக்கக்கூடிய மீட்பைப் பெற்றுத்தரமுடியாது. மீட்பானது தேவனுடைய ஓர் ஈவாகும். இது விலைமதிக்கமுடியாத ஒரு சொத்து. மீட்புகுறித்த இந்த உண்மையை நாம் மறக்காதிருந்தால், தேவன் நமக்குக் கொடுத்துள்ள மற்ற ஆஸ்திகளிலும் நல்ல உக்கிராணக்காரர்களாக நடக்கவேண்டுமென்கிற எண்ணம் நமக்கு இருக்கும்.

'கல்வாரியிலிருந்து ஒளிரும் வெளிச்சமிருந்தால்மட்டுமே இயற்கையின் போதனையை மிகச் சரியாக நாம் புரிந்துகொள்ளமுடியும். தீமையை வெல்வது எத்துணைச் சிறந்தது என்பதையும், நமக்குக் கிடைக்கிற ஒவ்வோர் ஆசீர்வாதமும் மீட்பின் ஓர் ஈவு என்பதையும் பெத்லகேம் சம்பவமும் சிலுவையும் நமக்குக் காண்பிக்கட்டும்.' - *EGW, Education, p 101.*

மீட்பிற்கான விலையைச் செலுத்தி, இயேசு நமக்கு அதை வாங்கித் தந்திருக்கிறார். 'அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது' என்று பவுல் கூறுகிறார். எபே 1:7. 'நமக்கு உண்டாயிருக்கிறது' என்றால், 'மீட்பு நமக்குக் கிடைத்திருக்கிறது' என்று அர்த்தம். தேவன் கொடுத்ததால், அதைப் பெற்றோம். அப்படியானால், சத்துரு வந்து, அதை எடுத்துச்சென்றுவிடாதபடி 'தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை' நாம் தரித்துக்கொள்வது எவ்வளவு முக்கியம்? எபே 6:11. நாம் அனுமதித்தால்மட்டுமே சத்துரு அதைக் களவாட முடியும். 'தேவவசனம்' வெளிப்படுத்துகிற சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியாமல் இருக்கும்போது, அவனை அனுமதிக்கிறோம். எபே 6:17. தேவன் நமக்குத் தந்துள்ள வெளிச்சத்திற்கு விசுவாசத்தோடு கீழ்ப்படிவதே நமக்குரிய மிகப் பெரிய பாதுகாப்பாகும்.

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எவ்வாறு தரித்துக்கொள்ளலாம்? சர்வாயுதவர்க்கத்தில் அடங்கியுள்ள அனைத்திற்கும் நாம் எவ்வாறு உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம்?

## உக்கிராணக்காரர்களாக நம் பொறுப்பு

சொந்தப் பொறுப்பு என்பது ஓர் ஒழுக்கம்; அதை ஏற்றுக்கொண்டு, அதன்படி வாழுகிறவர் ஞானமான உக்கிராணக்காரர். சொந்தப் பொறுப்பை நாம் ஏற்றிருந்தால், அதற்கேற்றபடி நம் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் இருக்கும். காரணம் அதன் விளைவு எனும் உறவு அதில் இருக்கும். சொந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் ஒரு முக்கியமான குணலட்சணமாகும்; ஏனென்றால், அது இல்லாமல் உக்கிராணத்துவம் இல்லை. எஜமானின் நலன்தான் முக்கியம் என்கிற ஒரே சிந்தைதான் உக்கிராணக்காரர்களின் மனதில் இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட தீர்மானம்செய்வதற்கு விருப்பம் இருக்கவேண்டும்; உக்கிராணக்காரன் ஒருவன் தேவனோடு உறவுவைக்க விரும்புவதற்கு அதுவே அடையாளமாகும்.

'மனிதர் தம்மோடு நேரடியாகத் தொடர்புகொள்வதை தேவன் விரும்புகிறார். மனிதரோடு அவருக்குள்ள உறவில், சொந்தப் பொறுப்பை அவர் அங்கீகரிக்கிறார். தனிப்பட்ட விதத்தில் தம்மைச் சார்ந்திருக்க வேண்டிய உணர்வை ஊக்குவிக்கிறார்; தனிப்பட்ட விதத்தில் வழிநடத்தப்படவேண்டியதின் அவசியத்தை உணர்த்துகிறார். தனிப்பட்ட விதத்தில்தான் மனிதர்களுக்கு தேவன் தமது வரங்களைத் தருகிறார். பரிசுத்த பொறுப்புகளின் உக்கிராணக்காரனாகவே ஒவ்வொரு மனிதனையும் தேவன் படைத்திருக்கிறார். அவற்றைக் கொடுத்தவரின் வழிகாட்டுதலின்படி நாம் நம் கடமையைச் செய்யவேண்டும்; ஒவ்வொருவனும் தன் உக்கிராணக் கணக்கை தேவனிடம் ஒப்படைக்கவேண்டும்.' – *EGW, 7T, p 176.*

நாம் உக்கிராணக்காரர்களாகிவிட்டால், நம்முடைய பொறுப்பை மற்றவர் மேலேயோ, ஓர் அமைப்பின் மேலேயோ சுமத்தமாட்டோம். தேவனுக்கே நாம் தனிப்பட்ட விதத்தில் பொறுப்பாளிகளாக இருப்போம்; நம்மைச்சுற்றிலும் உள்ளவர்களை நாம் அணுகுகிற விதத்தில் அது பிரதிபலிக்கும். ஆதி 39:9; தானி 3:16. நம் கைக்கு நேரிடுகிற வேலையை நாம் நம் முழுத் திறமையோடு செய்வோம். தேவனைப் பொறுத்தரையிலும் நம்முடைய வெற்றியானது நம் அறிவுத் திறனையும் தாலந்தையும் சார்ததல்ல; நம் விசுவாசத்தைச் சார்ந்ததாகும்.

**ஞானமுள்ள ஓர் உக்கிராணக்காரனாக நடந்துகொள்வதற்கு 2கொரி 5:10 எவ்வாறு உதவியாக இருக்கும்?**

சுயாதீன சித்தம் என்பது பல நூற்றாண்டுகளாக தத்துவஞானிகளுக்கும் இறையியல் வல்லுநர்களுக்கும் கடினமான ஒரு கேள்வியாகவே இருந்திருக்கிறது. ஆனால், நமக்குச் சுயாதீன சித்தமும் தெரிந்துகொள்ளும் உரிமையும் கொடுக்கப்பட்டிருப்பதாக வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. இல்லையேல், 'நம்முடைய கிரியைகளுக்காக நாம் நியாயந்தீர்க்கப்படுவோம்' என்று நாம் எப்படிக் கூறமுடியும்? எனவே, தனிப்பட்ட விதத்தில் நாம் பொறுப்புடையவர்களாக இருக்கிறோம்; நாம் செய்கிற ஒவ்வொன்றிலும் தேவனுடைய கிருபையால் சரியான தீர்மானங்களைச் செய்யவேண்டும்; நம் எஜமானுக்குச் சொந்தமானவற்றிற்கு உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருப்பதும் அதில் அடங்கும்.

பழைய ஏற்பாட்டு வசனங்கள் சிலவற்றில், 'உக்கிராணக்காரன்' என்பதற்கான வார்த்தை, ஒரு தனி வார்த்தையிலிருந்து வரவில்லை; ஒரு சொற்றொடரிலிருந்து வருகிறது. உதாரணமாக, **அஸெர் அல் பய்ட்**; இதற்கு, வீட்டு விசாரணைக்காரன் என்று அர்த்தம். 'யோசேப்பின் **வீட்டு விசாரணைக்காரனண்டையில்** சேர்ந்து, வீட்டு வாசற்படியிலே அவனோடே பேசி' என்கிறது ஆதி 43:19. இங்கே வீடு என்பதில், அங்கு வசிக்கும் குடும்பத்தாரும் அங்கம்தான்; அப்படியானால், ஒருவருக்கு தன் குடும்பத்தைவிட முக்கியமானது வேறு ஏதாவது இருக்கமுடியுமா? எனவே, உக்கிராணக்காரனை நம்பி, அவனிடம் விலைமதிப்புமிக்க ஒன்றை ஒப்படைத்தது தெரிகிறது; ஆனாலும், அவன் அதனுடைய சொந்தக்காரன் அல்லன். இதுதான் பல விதங்களில் ஓர் உக்கிராணக்காரனுடைய பொறுப்பை அதிகமாக்குகிறது.

இதே கருத்துதான் புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்படுகிறது. 'புதிய ஏற்பாடானது பழைய ஏற்பாட்டுக் கருத்தை எடுத்து, முதல் நூற்றாண்டுச் சிந்தனைகளையும் கருத்துகளையும் வார்த்தைகளையும் சேர்த்து, உக்கிராணத்துவம்பற்றி விளக்கமாகப் போதிக்கிறது. உக்கிராணத்துவத்துவம்பற்றிப் பேசும்போது, இரண்டு கிரேக்க வார்த்தைகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன: **எய்கோஸ் மற்றும் ஓய்கியா** (வீடு). **ஓய்கானாமாஸ்** என்றால் வீட்டைப் பார்த்துக்கொள்பவர் என்று அர்த்தம். **ஓய்கானாமியா** என்பது ஒரு பண்புப்பெயர்; இதற்கு 'வீட்டு நிர்வாகம்' என்று அர்த்தம்; இது ஏராளமான அர்த்தத்தை உள்ளடக்கியது.' – *Handbook of Seventh-day Adventist Theology (Hagerstown, Md.: Review and Herald Publishing Association, 2000), p. 653.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *விலக்கப்பட்ட கனியைப் புசித்ததற்கு ஆதாம் பொறுப்பேற்கவில்லை; அதுபற்றி தேவன் கேட்டபோது, ஆதாம் என்ன சொன்னார்? ஆதி 3:12. பாவமானது மற்றவர்மேல் பழிபோடச் செய்கிறது. இதை மனித வரலாற்றின் ஆரம்பத்திலேயே பார்க்கிறோம். தன் செயல்களுக்கு தானே பொறுப்பேற்க ஆதாம் எவ்வளவு தூரம் ஆயத்தமாக இருந்தார்? அவருடைய பதிலில் இருந்து என்ன தெரிகிறது? நாம் எவ்வளவு தூரம் ஆயத்தமாக இருப்போம்? நம் தவறுகளுக்கு பிறர்மேல் பழிபோடுவதை எவ்வாறு தவிர்க்கலாம்?*
2. *தொட்டுணரமுடியாத, ஆவிக்குரிய விஷயங்களில் உக்கிராணக்காரராக இருப்பது என்றால் என்ன? இவற்றை எவ்வாறு நிர்வகிக்கலாம்?*
3. *உக்கிராணக்காரர்களாக நமக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்த என்ன முக்கியச் சத்தியங்கள் முத்தூதில் உள்ளன? வெளி 14:6-12.*
4. *நம்மால் முற்றிலும் புரிந்துகொள்ளமுடியாத ஆவிக்குரிய விஷயங்களை நம்பவும், அதில் உறுதியாக இருக்கவும் என்ன செய்யலாம்? உலக வாழ்க்கையிலும்கூட நம்மால் புரியமுடியாதவற்றை பல வழிகளில் நாம் நம்பிதானே ஆகவேண்டும்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,
ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*